

முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் பெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட புதுச்சேரி மாநில மக்களுக்கு ரூ.35 லட்சம் மதிப்புள்ள 18.50 டன் அரிசி, 5000 புடவைகள், 5000 வேட்டிகள், 5000 பாய்கள் உள்ளிட்ட நிவாரண பொருட்களை புதுச்சேரி மாநில தி.மு.க. அமைப்பாளர் ஆர்.சிவா பெற்றுக்கொண்டார். அப்போது கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் ஆகியோர் உடனிருந்தனர்.



நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, நேற்று முன்தினம் (07.12.2024) திருச்சிராப்பள்ளி உறையூர் நகர்நல மையத்தில் மாநகராட்சியில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களுக்கு இலவச மருத்துவ பல்துறை பரிசோதனை முகாமைத் தொடங்கி வைத்து முகாமைப் பார்வையிட்டு பயனாளிக்கு தாய்சேய் நல பெட்டகம் வழங்கி தூய்மைப் பணியாளர்கள் சிறப்பான முறையில் பணிகளை மேற்கொள்ள பாதுகாப்பு உபகரணங்கள் அடங்கிய தொகுப்பினை வழங்கி பாராட்டினார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் மா.பிரதீப் குமார், மேயர் அன்பழகன், மாநகராட்சி ஆணையர் சரவணன், மாவட்ட நகர் ஊரமைப்புக் குழு உறுப்பினர் வைரமணி, மண்டல தலைவர்கள் மாமன்ற உறுப்பினர்கள், மருத்துவர்கள், மருத்துவ பணியாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# வேங்கைவயல் விவகாரத்தில் யாரையும் காப்பாற்ற வேண்டிய அவசியமில்லை!

## புதுக்கோட்டையில் அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!



புதுக்கோட்டை, டிச.10-

புதுக்கோட்டையில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

திராவிட முன்னேற்ற கழகத்திற்கு தப்பு கணக்கு போடும் பழக்கம் கிடையாது...

திருமாவளவன் திராவிட முன்னேற்றக் கழக கூட்டணியில் தான் இருக்கிறேன் என தெளிவாக சொல்லி விட்டார். நாங்கள் மன்னராட்சி நடத்தவில்லை, ஜனநாயக ஆட்சி தான் நடத்துகிறோம், எங்களிடம் வாரிசு அரசியல் கிடையாது. உழைப்பால் தான் வந்திருக்கிறோம், திராவிட முன்னேற்றக் கழக தொண்டன் ஒவ்வொருவரும் ஏற்றுக்கொண்ட தலைவர் தான் தளபதி அவர்கள்..

தொண்டர்கள் ஒவ்வொருவரும் போராடி அமைச்சர் உதயநிதிக்கு வாங்கி கொடுத்த பதவி தான் துணை முதலமைச்சர் பதவி...

வாரிசு என்ற அடிப்படையில் அவருக்கு துணை முதலமைச்சர் பொறுப்பு வரவில்லை...

அரசியலில் யாருக்கு வேண்டும் என்றாலும் பதில் சொல்லலாம். அதற்கு தகுந்த நேரம் வரவேண்டும், இன்றைக்கு விஜய் அந்த அளவுக்கு வளர்ந்து இருக்கிறாரா என்றால் இல்லை என்பது தான் எங்களுடைய கருத்து.

எங்களுடைய தலைவர் திராவிட மாடலை முன்னெடுத்து செல்லக்கூடிய கருத்தியல் தலைவர். வேங்கை வயல் விவகாரத்தில் நீதியரசர் சத்தியநாராயண் கமிஷன் நியமித்துள்ளோம், டிஎன்ஏ பரிசோதனை மேற்கொள்ளப் பட்டது. அரசாங்க முறைப்படி இதில் பணியாற்றிக் கொண்டிருக்கிறோம். வேங்கைவயல் விவகாரத்தில் யாரையும் காப்பாற்ற வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை. இதில் அமைச்சரோ, எம்எல்ஏ வோ இதில் குறிக்கீடு செய்யவில்லை. அங்கிருக்கும் சாதி அரசியலை வைத்துக் கொண்டு கற்பனை செய்து கொண்டால் அதற்கு நாங்கள் பொறுப்பல்ல.

டிஎன்ஏ பரிசோதனை ஒத்துப் போகவில்லை, இனி மேல் கிராமத்தில் உள்ள அனைவரையும் பரிசோதனை செய்து தான் பார்க்க வேண்டும், அதையும் வேண்டுமென்றால் செய்வோம்...

நாம் தமிழர் கட்சி குறித்து பேசிய திருச்சி எஸ் பி வருண் விவாகரத்தில் துணைத் தலைவர் நடவடிக்கை எடுத்து விசாரணை செய்வார்.

தி.மு.க. மிக சக்தி வாய்ந்த கட்சி, நாம் தமிழர் கட்சி மிக சாதாரணமான கட்சி, இப்பொழுதுதான் நாம் தமிழர் கட்சி மூன்றாவது இடத்திற்கு வந்துள்ளதாக சீமான் சொல்கிறார். அங்கிருப்பவர்கள் அவரை விட்டு சென்று விட்டனர். அப்படி இருக்கும் பட்சத்தில் அவரிடம் நாங்கள் ஏன் நேரடியாக மோத வேண்டும்.

திருச்சி எஸ்பி வருண் தனிப்பட்ட முறையில் தாக்குதலுக்கு உள்ளாகும் போது, தனிப்பட்ட முறையில் பேசுவதற்கும் சட்டத்தில் இடம் உள்ளது. அரசு அதிகாரியாக இருந்தாலும் தனது தனிப்பட்ட உரிமையை காப்பாற்றிக் கொள்ள உரிமை உண்டு.

நாம் தமிழர் கட்சி கண்காணிக்கப்பட வேண்டிய இயக்கம் என எஸ் பி வருண் பேசியதற்கு, ஒன்றிய அரசு அது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதானி விவகாரத்தில் ஜெயலலிதா முதலமைச்சராக இருந்தபோது போடப்பட்ட ஒப்பந்தம். அது தற்போது வரை தொடர்ந்து வருகிறது. திமுக புதிதாக எந்த ஒப்பந்தமும் போடவில்லை. அதானியை அழைத்து வந்தது அண்ணா திமுக, இதுகுறித்து அதிமுக விடம் தான் கேள்வி கேட்க வேண்டும். கோடநாடு வழக்கை தாமதப்படுத்த வேண்டிய அவசியம் திமுக அரசுக்கு இல்லை.

முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் பொறியாளர்கள் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

இந்தியாவிலேயே பேரிடர் காலத்தின் போது சம்பவ இடத்திற்கு அமைச்சர்களை அனுப்பி, அங்குள்ள மக்களுக்கு உதவக்கூடிய அரசாக தி.மு.க. அரசு செயல்பட்டு வருகிறது என்று பேட்டியளித்தார்.

# முத்தமிழறிஞர் கலைஞரால் கொண்டுவரப்பட்ட ஆர்.எம்.எஸ். அலுவலகத்தை மூடுவதா?

## ஒன்றிய அரசுக்கு பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. கண்டனம்!

திருவாரூர்,டிச.9-

திருவாரூரில் தலைவர் கலைஞர் அவர்களால் கொண்டுவரப்பட்ட ரயில்வே மெயில் சர்வீஸ் எனப்படும் தபால்கள் பிரிக்கும் ஆர்.எம்.எஸ். அலுவலகத்தை அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு ஒன்றிய பாஜக அரசு மூடுவதற்கு சட்டமன்ற உறுப்பினரும் மாவட்டச் செயலாளருமான பூண்டி.கே.கலைவாணன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

திருவாரூரில் இருந்து மயிலாடுதுறைக்கு மாற்றுவதாகக்கூறி 52ஆண்டுகளாக சொந்தக் கட்டிடத்தில் இயங்கிவருவதும் ,மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் கொண்டுவரப்பட்டதுமான ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தின் இரண்டாவது ஆர்.எம்.எஸ். அலுவலகத்தை அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு மூடுவதற்கு முன்வந்திருக்கும் ஒன்றிய பாஜகஅரசுக்கு கண்டனம் தெரிவித்து திருவாரூர் ஆர்.எம்.எஸ்.அலுவலகம் எதிரே கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு நாகை நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ் எம்.பி. தலைமை வகித்தார். மாவட்டச்செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. பங்கேற்று கண்டன உரையாற்றினார். அப்போது ஆர்.எம்.எஸ். அலுவலகத்தை மாற்றுவதற்கு கண்டனம் தெரிவித்ததோடு, இதுகுறித்து தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களிடமும், நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி அவர்களிடமும் தகவல் தெரிவிக்கப்பட்டு ஆர்.எம்.எஸ்.அலுவலகத்தை திருவாரூரிலேயே இயங்க தக்க நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என குறிப்பிட்டார்.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட ஊராட்சிப் பெருந்தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, துணைத்தலைவர் சேகர் கலியபெருமாள், ஒன்றியப்பெருந்தலைவர் தலைவர் புலிவலம் ஏ.தேவா, நகரமன்றத்தலைவர்கள் புவனப்ரியா செந்தில், பாத்திமா பஷீரா, ஒன்றியச்செயலாளர்கள் ஆர்.பாலச்சந்திரன், ஐ.வி.குமரேசன், தெட்சிணாமூர்த்தி, கவியரசு, நகர செயலாளர்கள் வாரை.எஸ்.பிரகாஷ்,எஸ்.வி. பக்கிரிசாமி, பொதுக்குழு உறுப்பினர் டி.செந்தில், திட்டக்குழு உறுப்பினர் இரா.சங்கர், வர்த்தகர் சங்கத்தலைவர் பாலமுருகன் ஆகியோர் முன்னிலை ஏற்றனர்.

முடிவில் சி.பி.ஐ.நிர்வாகி மாசிலாமணி நன்றி கூறினார். ஆர்ப்பாட்டத்தில் விடுதலை சிறுத்தைகள் உள்ளிட்ட கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், வர்த்தகர் சங்கம் உள்ளிட்ட 25 க்கும் மேற்பட்ட சங்கங்களின் நிர்வாகிகள், பொதுமக்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்.

# அரியலூர் மாவட்டத்தில் 322 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்!

அரியலூர்,டிச.9-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை, எழும்பூர், ராஜரத்தினம் மைதானத்தில் நடைபெற்ற அரசு விழாவில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் தூய்மைப் பணியாளர்களை தொழில் முனைவோர்களாக மாற்றும் உன்னத திட்டத்தின் கீழ் தூய்மைப் பணியாளர்களுக்கு 213 நவீன கழிவுநீர் அகற்றும் வாகனங்கள் வழங்கிடும் முதற்கட்டமாக 100 நவீன கழிவுநீர் அகற்றும் வாகனங்களை (06.12.2024) வழங்கினார்.

மேலும், அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தின் கீழ் 128 பயனாளிகளுக்கு கடனுதவிக்கான ஆணைகளையும், 100 தூய்மைப் பணியாளர்களுக்கு சுகாதார அட்டைகளையும், 30 நரிக்குறவர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய திட்டப் பகுதியில் வீடுகள் கட்டுவதற்கான ஆணைகளையும் வழங்கினார்.

அதனைத்தொடர்ந்து தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் சுபம் மஹாலில் ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் உள்ளிட்ட 322 பயனாளிகளுக்கு ரூ.131.25 இலட்சம் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர். தொல்.திருமாவளவன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் காட்டுமன்னார்கோவில் சட்டமன்ற உறுப்பினர் சிந்தனைச்செல்வன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசியதாவது

இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் இன்றையதினம் சிறப்புமிக்க திட்டத்தினை துவக்கி வைத்துள்ளார்கள். குறிப்பாக ஒடுக்கப்பட்ட மக்களின் போராளியாக, புரட்சியாளராக, இந்திய அரசமைப்பு சட்டத்தை வழிவகுத்து தந்த புரட்சியாளர் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் நினைவு தினத்தில் இந்நிகழ்ச்சி நடத்தப்பெறுவது மிகவும் சிறப்புக்குரிய தாகும்.

சமூக ரீதியாக ஒடுக்கப்பட்டவர்களை மீட்டெடுப்பதற்காக இடஒதுக்கீடு கொண்டு வரப்பட்டது. புரட்சியாளர் அம்பேத்கர் காட்டிய வழியில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பொருளாதார ரீதியாக பின்தங்கிய நிலையில் உள்ள மக்களுக்கு கைதூக்கிவிடும் வகையில் தூய்மை பணியாளர்களை முதலாளிகளாக மாற்றும் வண்ணம் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் 213 நவீன கழிவுநீர் அகற்றும் வாகனங்கள் வழங்கிடும் முதற்கட்டமாக 100 நவீன கழிவுநீர் அகற்றும் வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளது என தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசினார்.

பின்னர் சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர் தொல்.திருமாவளவன் பேசியதாவது:

புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களின் வீர வணக்கம் தினம் இன்று. நாடு முழுவதும் அவருக்கு வீரவணக்கம் செலுத்தி கொண்டு இருக்கிறோம். தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களின் நினைவு நாளில் வீர வணக்கம் செலுத்தி கடந்த காலத்திலும், இப்பொழுதும் புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள் கண்ட கனவை செயல்படுத்தி வருகிறது என்பதை சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியின் வாயிலாக கேட்கிறோம்.

தூய்மை பணியாளர்களை தொழில்முனைவோர்களாக மாற்றும் உன்னதமான திட்டத்தினை இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்திருப்பது இந்த அரசு விளிம்பு நிலையில் உள்ள மக்களுக்கானது என உறுதியாகிறது. இந்த நாளில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி அரியலூர் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் 07 பயனாளிகளுக்கும், தாட்கோ சார்பில் 74 பயனாளிகளுக்கும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில் 40 பயனாளிகளுக்கும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் 98 பயனாளிகளுக்கும், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சார்பில் 25 பயனாளிகளுக்கும், கூட்டுறவுத்துறையின் சார்பில் 46 பயனாளிகளுக்கும், மாவட்ட தொழில் மையத்தின் சார்பில் 6 பயனாளிகளுக்கும், வேளாண்மை மற்றும் உழவர்நலன் சார்பில் 4 பயனாளிகளுக்கும், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில் 3 பயனாளிகளுக்கும், வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில் 1 பயனாளிக்கும், முன்னோடி வங்கி சார்பில் 6 பயனாளிகளுக்கும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் 12 பயனாளிகளுக்கும் என மொத்தம் 322 பயனாளிகளுக்கு ரூபாய் 1 கோடியே 31 இலட்சத்து 25 ஆயிரம் மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள் குறித்து தந்தை பெரியார் அவர்கள் என்ன சொன்னார் என்பதை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேசியது மகிழ்ச்சிக்குரியது. மேலும் இந்த நாளில் விளிம்பு நிலை மக்களின் சமூக முன்னேற்றத்திற்காக செயல்படவேண்டும் என சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர். தொல்.திருமாவளவன் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் ம.ச.கலைவாணி, ஜெயங்கொண்டம் நகர் மன்றத் தலைவர் சுமதி சிவக்குமார், அரியலூர் நகர் மன்றத் தலைவர் சாந்தி கலைவாணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) பரிமளம், வருவாய் கோட்டாட்சியர்கள் மணிகண்டன் (அரியலூர்), ஷீஜா (உடையார்பாளையம்), மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் ராஜஸ்ரீ, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) பழனிசாமி, அரியலூர் நகர்மன்ற துணைத்தலைவர் கலியமூர்த்தி, ஜெயங்கொண்டம் நகர்மன்ற துணைத் தலைவர் வெ.கொ.கருணாநிதி, வட்டாட்சியர் (ஆதிதிராவிடர் நலம்) துரை, கழக சட்டத்திட்ட திருத்தகுழு இணை செயலாளர் சுபா. சந்திரசேகர், தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்ரமணியன், மாவட்ட துணை செயலாளர் மு.கணேசன், ஒன்றிய கழக செயலாளர்கள் தனசேகர், இரா. மணிமாறன், ரெங்க.முருகன், ஆர்.கலியபெருமாள், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.ஞாயிகதிரவன் மாவட்ட நிலை அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் புதுக்கோட்டை நகர்மன்றத்தில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே. செல்லபாண்டியன் தலைமையிலும், மாநகர செயலாளர் ஆ.செந்தில் வரவேற்புரையிலும் நடைபெற்ற துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா திராவிட கருத்தரங்கத்தை மாநில மருத்துவரணி துணைச் செயலாளர் கலை.கதிரவன் துவங்கி வைத்து சிறப்புரையாற்றினார். நிகழ்வில் கவிச்சுடர் கவிதைப் பித்தன், த.சந்திரசேகரன், அரு. வீரமணி, சுப.சரவணன், செ.அசோக் பாண்டியன், கே.ஆர்.என்.போஸ், எஸ்.எஸ்.கருப்பையா, பெ.ராஜேஸ்வரி, க.மதியழகன், எம்.லியாகத் அலி, சு.சண்முகம் கழக இளம் சொற்பொழிவாளர் நாமக்கல் ம.மோகநிதி, தஞ்சாவூர் ஜோ.வியானி விஷ்வா, புதுக்கோட்டை சோ.தமிழினியன் மற்றும் மாநகா, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, கிளைக் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவின்படி போக்குவரத்துத்துறை அமைச்சர் சிவசங்கர் வழிக்காட்டுதலின்படியும், உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் சட்டமன்ற தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், சரபோஜராஜபுரம் ஊராட்சி, வேட்டமங்கலம் கிராமத்தில் உள்ள பள்ளி மாணவ, மாணவியர்கள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கைக்கு ஏற்ப கும்பகோணத்திலிருந்து கோணுலாம்பள்ளம் இயக்கப்படும் நகர பேருந்தினை காமாட்சிபுரம் வழியாக வேட்டமங்கலம் வரை நீட்டிப்பு செய்த புதிய வழித்தட பேருந்தினை துவக்கி வைத்தார். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினரும், முன்னாள் எம்.பியுமான செ.இராமலிங்கம், திருப்பனந்தாள் ஒன்றிய குழு தலைவர் தேவி இரவிச்சந்திரன், துணைத்தலைவர் கோ.க.அண்ணாதுரை, ஒன்றிய செயலாளர்கள் மிசா என்.மனோகரன், இர.உதயச்சந்திரன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள் பாலகுரு, இளவரசி உள்ளிட்ட அரசு அதிகாரிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் உள்ளனர்.